## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

### 1. நிதிசார் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினைத் தவிர, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கமைய (எஸ்எல்பிஏஎஸ்) நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கை

நிதிக் கட்டுப்பாடுகளின் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் மற்றும் முன்னேற்றப்படுதலின் பொருட்டு மீளாய்வாண்டில் அதிகாரசபையின் அரச மானியமாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்ட ரூபா 32,648,921,966 க்கான தேவை மற்றும் பயன்பாடு என்பன வெளிக் கொணரப்படவில்லை.

### 1.2.2 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்கள் (எஸ்எல்பிஏஎஸ்)

பின்வருவம் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2011 ஆம் ஆண்டில் குத்தகை அடிப்படையில் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 9 வாகனங்களது கிரயமான ரூபா 48.45 மில்லியன் 2012 ஆம் ஆண்டில் கணக்கிலிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், எஸ்எல்பிஏஎஸ் – 03 க்கமைய 2011 ஆம் ஆண்டிற்கான காலக்கழிவுக் கிரயமாகிய ரூபா 3.79 மில்லியன் இதற்கேற்ப கணக்குகளில் சீராக்கல் செய்யப்படவில்லை.

(ii) 2010 நவெம்பர் 26 ஆந் திகதியன்று ரூபா 17.90 மில்லியன் பெறுமதியுடைய வாகனமொன்று கொழும்பு – கட்டுநாயக்கா அதிவேகப்பாதைச்

செயற்திட்டத்திடமிருந்து அதிகாரசபைக்கு மாற்றஞ் செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2010 ஆம் ஆண்டில் அது கணக்கிலிடப்படவில்லை. அதற்குப் பதிலாக, 2012 ஆம் ஆண்டிலேயே அது கணக்கிலிடப்பட்டிருந்தது. மேலும் அதன் மீதான 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளுக்கான தேய்மானமாகிய ரூபா 3.78 மில்லியன் எஸ்எல்பிஏஎஸ் – 03 க்கமைய, கணக்குகளில் சீராக்கல் செய்யப்படவில்லை.

### 1.2.3 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வருவன அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் திணைக்களம் என்பவற்றிலிருந்து மாற்றஞ் செய்யப்பட்ட காணிகளின் 36 பெறுமதியான காணித் துண்டுகளில் 21 காணித் துண்டுகள் மகுல்தெனிய எனும் பெயரில் 0.62018 ஹெக்டயார் விஸ்தீரணத்தில் நாராஹேன்பிடவில் உள்ள தாபரே மாவத்தையில் இருந்த அதிகாரசபையினது நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்தப்பட்ட இவை மதிப்பிடப்பட்டு நிதிக்கூற்றுக்களில் சேர்த்துக் கொள்ளப்படவில்லை.

(ஆ) கடுவெல பிரதேச செயலாளர் பிரிவில் உடுமுல்லவில் அமைந்துள்ள 1.1304 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள காணி ஒன்று சுவீகரிக்கப்பட்டு 2002 ஜுன் 05 அன்று அதிகாரசபையால் ரூபா 56 மில்லியன் இழப்பீடு வழங்கப்பட்டுமிருந்தது. எவ்வாறாயினும், இது அதிகார சபையின் சொத்தாகக் காட்டப்படவில்லை.

(இ) 2010 பெப்ரவரி 24 ஆந் திகதியன்று ஒறுகொடவத்தையில் 2 ஏக்கர் பரப்பளவுள்ள வாதுலவத்தை காணி ரூபா 5,875,788 பெறுமதியில் சுவீகரிக்கப்பட்டிருந்தது. ஆயினும், இது நிதிக்கூற்றுக்களில் ரூபா 373,786 ஆக ரூபா 5,502,002 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) உள்ளூர் வங்கியால் நிதியளிக்கப்படும் வீதிப் புனரமைப்புச் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் வேறாகத் தயாரிக்கப்பட வேண்டுமாயினும், செயற்திட்டத்தின் செயற்பாட்டு விளைவுகள் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களுடன் கூட்டிணைக்கப்பட்டிருந்தது.

(உ) டென்சில் கொப்பேகடுவ வீதியில் உள்ள இறையில் காணி மீதான குத்தகை வாடகைக் கொடுப்பனவு தவறாகக் கணிப்பிடப்பட்டமையால் நடைபெறும்

வேலையும் திரண்ட இலாபமும் ரூபா 7,000,000 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஊ) பயன்படுத்தப்படாத விடுமுறைக் கொடுப்பனவுக்கான நிதியேற்பாட்டிற்கு அதிகாரசபையால் ஆண்டின் இறுதியில் ரூபா 3,025,234 க்கான தவறான நாட்குறிப்பு பதிவுகள் பயன்படுத்தப்பட்டிருந்தன. இதன் விளைவாக, மீளாய்வாண்டிற்கான பற்றாக்குறையும் சேர்ந்து நின்ற செலவினமும் ரூபா 3,025,234 குறைத்தும் அதிகரித்தும் காட்டப்பட்டிருந்தன.

(எ) வாடிக்கையாளர் வைப்புக் கணக்கில் வரவு வைப்பதன் மூலமும் தேங்கிய இலாபக் கணக்கில் செலவு வைப்பதன் மூலமும் ஆண்டின் இறுதியில் ரூபா 3,012,980 க்கான தவறான நாட்குறிப்பு பதிவு இடப்பட்டமை அவதானிக்கப்பட்டது. இதன் விளைவாக, அதிகாரசபையின் உரிமை மூலதன மற்றும் நடைமுறைப் பொறுப்பு என்பன முறையே நிதிக்கூற்றுக்களில் இதேயளவு தொகையால் அதிகரித்தும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஏ) நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து டென்சில் கொப்பேகடுவ வீதியில் உள்ள காணி ஒன்று இறையில் அடிப்படையில் அதிகார சபையால் பெறப்பட்டு, குத்தகையாளருடனான முன்னைய குத்தகை உடன்படிக்கையை இரத்துச் செய்தமைக்கு இழப்பீடாக 2007 முதல் 2010 மூன்று சந்தர்ப்பங்களில் ரூபா 50 மில்லியன் இழப்பீடாக மத சார்புடைய நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ரூபா 30 மில்லியன் கணக்கிலிடப்பட்டு இறையில் காணியினது கிரயமாக மீளாய்வாண்டில் காட்டப்பட்டிருந்தது. எஞ்சிய ரூபா 20 மில்லியன் 2009 ஆம் ஆண்டின் நிர்வாகச் செலவினத்தில் சாட்டப்பட்டிருந்தது.

(ஐ) தெற்கு அதிவேகப் பாதைச் செயற்திட்டத்தால் ரூபா 1,113.33 மில்லியன் கிரயத்தில் கொள்வனவு செய்யப்பட்ட 77 புத்தம் புதிய வாகனங்களும் ரூபா 5.4 மில்லியன் கிரயத்தில் கொள்னவு செய்யப்பட்ட வாகனம் ஒன்றும் முறையே 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் அதிகாரசபையிடம் கையளிக்கப்பட்டபோதும், அவை பேரேட்டுக் கணக்கிலிடப்படவில்லை.

(ஒ) பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் உதவியுடன் 2012 ஆம் ஆண்டில் அதிகார சபையால் தீவடங்கிலும் நிறுவப்பட்ட 13 அஸ்பல்ட் உற்பத்திப் பொறிகளது பெறுமதி நிர்ணயிக்கப்பட்டுக் கணக்கிலிடப்படவில்லை. அதே வேளையில், அவற்றை நிறுவுவதற்கான கிரயமாகிய ரூபா 124,165,390 மாத்திரமே மூலதனமாக்கப்பட்டிருந்தது. ஆகவே, இயந்திர சாதனங்களின்

கீழ் காட்டப்பட்ட பொறிகளது பெறுமதியும் பெறப்பட்ட அரசாங்க மானியமும் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன.

(ஓ) தெற்கு அதிவேகப் பாதை திறப்பு விழாவிற்கு செலவழிக்கப்பட்ட ரூபா 17,739,681 தெற்கு போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்திடமிருந்து பெற வேண்டியனவாக 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் காட்டப்படவில்லை.

(ஔ) மட்டகளப்பு மனைகளைத் திருத்துவதற்குச் செலவாகிய ரூபா 1,121,546 கிரயமானது கட்டிட முன்னேற்றத்தின் கீழ் அல்லாது நடைபெறும் வேலையாகக் காட்டப்பட்டிருந்தது.

(க) வடமேற்கு மாகாண அலுவலகத்தின் கட்டிடப் பராமரிப்புச் செலவாகிய ரூபா 1,482,503 கூட்டுமொத்தத் தொகை கட்டிடங்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ங) பிரதான பொறியியலாளர் அலுவலகம் மற்றும் திருகோணமலையில் உள்ள உத்தியோகத்தர்களது விடுதிகளை மீள நிர்மாணிப்பதற்கான கிரயம் ரூபா 2.4 மில்லியனை மூலதனத் தன்மையை கருத்திற்கொள்ளாமல் வீதித்துறை உதவிச் செயற்திட்டத்திடமிருந்து 2012 ஆம் ஆண்டில் பெறப்பட்ட மானியத்துக்கெதிரே பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ச) பல்வேறு காரணங்களின் பொருட்டுச் செலவாகிய ரூபா 4,481,450 விளம்பரச் செலவினமானது கேகாலை நகரில் உள்ள குழுக்கு வீதி நிர்மாண வேலைக் கிரயமாகத் தவறுதலாகக் காட்டப்பட்டிருந்தது.

### 1.2.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

வேலைகளைத் தொடங்குவதற்கென ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 77,040,957 முற்பணமானது 3 ஆண்டுகளுக்கு மேலாக அறவிடப்படாதிருந்தது.

### 1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட இணங்காச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டம் | |
| (i) பிரிவு 8(i) | 2011 செப்டம்பர் 30 க்கு முன்னர் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட வேண்டிய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் 2012 ஆம் ஆண்டிற்கான வரவு, செலவுத் திட்டம 2012 நவெம்பர் 12 ஆந் திகதியன்றே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (ii) பிரிவு 14(i) | நிதியாண்டு முடிவுற்று 60 நாட்களுக்குள் தயாரிக்கப்பட வேண்டிய 2012 ஆம் ஆண்டின் வரைவு வருடாந்த அறிக்கை குறித்த அமைச்சுக்கும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அத்தகைய அறிக்கைகள் 2013 ஜுன் 30 வரை தயாரிக்கப்படவில்லை. |
| (ஆ) திறைசேரிச் சுற்றறிக்கைகள் | |
| (i) 2005 ஜனவரி 31 ஆந் திகதிய பீஈடீ/28 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | அதிகாரசபையானது ரூபா 46,239,371 பெறுமதியான 17 வாகனங்களதும் ரூபா 28,573,096 பெறுமதியான 2 வாகனங்களதும் கொள்வனவிற்கு பொது முயற்சிகள் திணைக்களப் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தைப் பெறப்பட்டிருக்க வில்லை. |
| (ii) 2007 டிசெம்பர் 18 ஆந் திகதிய பீஈடீ/47 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கை | 2013 மே 15 ஆந் திகதியன்றே 2011-2015 க்கான கூட்டிணைந்த திட்டத்தை வீதி அபிவிருத்தி அதிகாரசபை தயாரித்து அங்கீகரித்திருந்தது. 2012 – 2016 க்கான கூட்டிணைந்த திட்டம் 2013 ஆகஸ்ட் 31 அன்றும் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்படாதிருந்தது. |

| | |
|---|---|
| (iii) 2010 டிசெம்பர் 07 ஆந் திகதிய 150 ஆம் இலக்க தேசிய பாதீட்டுத் திணைக்களச் சுற்றறிக்கையினது 08 ஆம் பந்தி | 2011 ஆம் ஆண்டில் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட நிதியத்தின் மூலம் அதிகாரசபைக்கு ரூபா 136 மில்லியன் பெறுமதியான 23 புதிய வாகனங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதிகாரசபையானது கைதவிர்ப்புச் செய்யப்பட வேண்டிய 113 வாகனங்களை உள்ளடக்கிய நிரல் ஒன்றைத் தயாரித்திருந்தது. எவ்வாறாயினும், 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு 13 வாகனங்கள் மாத்திரமே கைதவிர்ப்புச் செய்யப்பட்டிருந்தன. அவற்றின் விற்பனைத் தொகையான ரூபா 7,157,449 மற்றும் மேற்படி நிரலில் உள்ளடங்காத வேறு 6 வாகனங்களது விற்பனைத் தொகையான ரூபா 3,453,724 என்பன ஒருங்கிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்படவில்லை. |
| (இ) வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் 2011 ஒக்டோபர் 17 ஆந் திகதிய 327 ஆம் இலக்க நிதிச் சுற்றறிக்கை | தலைமை அலுவலகத்தின் 2 பிரிவுகளுக்கும் அதிகாரசபையின் 22 உப அலுவலகங்களுக்கும் வழங்கப்பட்ட சில்லறைக் காசுக் கட்டுநிதியின் கூட்டுத் தொகையான ரூபா 894,169 ஆறு உப அலுவலகங்களுக்கு வழங்கிய எரிபொருள் கட்டுநிதியின் கூட்டுத் தொகையான ரூபா 209,348 என்பன சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டவாறு ஆண்டின் இறுதியில் தீர்த்து வைக்கப்படாதிருந்தன. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான அதிகார சபையின் செயற்பாட்டினால் விளைந்த வரிக்கு முன்னரான தேறிய பற்றாக்குறை ரூபா 547 மில்லியனை இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வரிக்கு முன்னரான

தேறிய பற்றாக்குறை ரூபா 385 மில்லியனுடன் ஒப்பிடலாம். மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளில் ரூபா 162 மில்லியன் குறைவை இது காட்டுகின்றது. தெற்கு அதிவேகப் பாதையில் ரூபா 688 மில்லியன் மிகை உள்ளபோதும், ஆளுக்குரிய வேதனம், நேரடித் தொழில், ஏனைய நிர்வாக மற்றும் சேவைநாடுநர் வேலைகள் என்பவற்றினது கிரயம் ரூபா 829 மில்லியன் அதிகரித்தமையே மீளாய்வாண்டிற்கான நிதிசார் விளைவுகளின் இக்குறைவுக்குக் காரணமாக அமைந்தன.

### 2.2 பகுப்பாய்வுடனான நிதிசார் மீளாய்வு

தெற்கு அதிவேகப் பாதையின் வருமானமும் கிரயமும் அதிகார சபையின் நிதிசார் கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டபோதும், அதிகார சபையின் நடவடிக்கைகள் மீளாய்வாண்டிலும் முன்னைய ஆண்டிலும் தேறிய பற்றாக்குறையை விளைவித்திருந்தன. திரண்ட பற்றாக்குறையில் தேறிய அதிகரிப்பை இது சுட்டிக் காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்ட 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிசார் நிலைமைக் கூற்றில் காட்டப்பட்ட சில குறிப்பிடத்தக்க விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
|---|---|---|
| | 2012 | 2011 |
| | ரூபா.மில் | ரூபா.மில் |
| தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | (3,170) | (4,482) |
| தேறிய சொத்துக்கள் | 69,355 | (3,109) |
| திரண்ட பற்றாக்குறை | (8,205) | (5,439) |

2012 ஆம் ஆண்டில் தெற்கு அதிவேகப் பாதையின் கிரயம் ரூபா 76,444 மில்லியனளவு மூலதனமாக்கியதால் அதிகாரசபையின் தேறிய சொத்துக்கள் அதிகரித்துள்ளன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

#### 3.1.1 அதிகார சபையின் வர்த்தக ரீதியில் அமையாத நடவடிக்கைகள்

(அ) தேசிய வீதிகளையும் பாலங்களையும் பராமரித்தல்

பாலங்களினதும் மேற்பாலங்களினதும் பராமரிப்பு மீதான நிதி ஒதுக்கீடும் உள்ளவாறான செலவினமும் பின்வருமாறு.

| | மூல நிதி ஒதுக்கிடு 2012 | மீளாய்வு செய்யப்பட்ட நிதி ஒதுக்கீடு | உள்ளவாறான செலவினம் | பயன்பாடு, மூல நிதி ஒதுக்கீட்டின் சதவீதமாக |
|---|---|---|---|---|
| | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | **ரூபா.மில்** | |
| பொதுப் பராமரிப்பு | 1296.8 | 2807.4 | 2830.8 | 218 |
| தொடர்ச்சியானபராமரிப்பு | 689.2 | 882.0 | 878.1 | 127 |
| காலரீதியான பராமரிப்பு | 1579.6 | 558.5 | 552.9 | 35 |
| வடிவகாலமைப்பு முறைமை பராமரிப்பு | 861.3 | 132.0 | 126.6 | 15 |
| சமிக்ஞை விளக்குப் பராமரிப்பு | 483.5 | 132.5 | 128.8 | 27 |
| அவசர மற்றும் இயற்கை அனர்த்தங்களின் போதான பராமரிப்பு | 569.1 | 982.6 | 978.6 | 172 |
| பொதியின் செயற்பாடும் பராமரிப்பு | 20.5 | 5.0 | 4.2 | 20 |
| **மொத்தம்** | **5500.0** | **5500.0** | **5500.0** | **-** |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஆரம்ப ஒதுக்கீட்டுக்கும் உள்ளவாறான பயன்பாட்டிற்கும் இடையேயான இடைவெளியைக் குறைப்பதற்கு ஆண்டின் இறுதியில் மாகாண ரீதியான ஆரம்ப ஒதுக்கீடுகளை அதிகாரசபை மீளச் சீரமைத்திருந்தது.
ஆரம்ப ஒதுக்கீட்டுடன் ஒப்பிடுகையில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வட மாகாணத்தைத் தவிர, ஏனைய மாகாணங்கள் பொதுப் பராமரிப்பிற்கான தமது ஒதுக்கீடுகளில் அதிகரிப்புக்குள்ளாகியிருந்தன.

(ii) ஏழு மாகாண அலுவலகங்களது தொடர்ச்சியான வீதிப் பராமரிப்பு வேலைகள் அதிகரிப்புக்குள்ளாகியிருந்தன.

(iii) காலரீதியான அடிப்படையில் பராமரிப்பு மேற்கொள்வதும் வடிகாலமைப்புப் பராமரிப்பை மேற்கொள்வதற்குமான ஒதுக்கீட்டினை

சகல மாகாணங்களும் குறைவாகவே பயன்படுத்தியிருந்தன. மேலும், போக்குவரத்து சமிக்ஞை விளக்குப் பராமரிப்பெற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 483 மில்லியன் மொத்தத் தொகையில் ரூபா 128.8 மில்லியன் மாத்திரமே செலவாகியிருந்தது. போக்குவரத்து சமிக்ஞை விளக்குப் பராமரிப்பிற்கு மொத்தமாக ஒதுக்கப்பட்ட ரூபா 4.89 மில்லியனையும் வடிகாலமைப்புப் பராமரிப்பிற்கான ரூபா 32 மில்லியனையும் அக்கறைப்பத்தில் உள்ள மேலதிக மாகாண அலுவலகம் பயன்படுத்தவில்லை.

(iv) பெரிகளைப் பராமரிப்பதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையைப் பயன்படுத்துவதில் வெகு குறைவான முன்னேற்றமே தென்பட்டது.

(v) சமிக்ஞை விளக்கைப் பராமரிப்பதற்கு தனது பிரிவுக்கென ஒதுக்கீடு எதுவுமின்றியே சபையின் திட்டமிடல் பிரிவு ரூபா 13 மில்லியனைச் செலவழித்திருந்தது.

(ஆ) வீதிகளது பராமரிப்பு, அகலமாக்கல் மற்றும் முன்னேற்றம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வீதிப் பராமரிப்பிற்கான மொத்த ஒதுக்கீட்டிற்குப் புறம்பாக, மேலும் ரூபா 32.50 மில்லியன் ஹொறனை நிறைவேற்று பொறியியலாளரின் அலுவலகத்தின் கீழ் உள்ள வெளிச்ச/ சமிக்ஞை விளக்கு வெளிச்ச / வீதிகளை அடையாளமிடுதல், வீதித் தளபாட அமைப்பு என்பவற்றினது பராமரிப்புக்காக அதிகாரசபையால் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தால் ஒதுக்கீட்டின் 39.36 சதவீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ரூபா 12.79 மில்லியன் மாத்திரமே 2012 ஆம் ஆண்டில் இதன் பொருட்டு செலவிடப்பட்டிருந்ததா எனவும் பிரதேசத்தில் சிறந்த விதிப் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டதா எனவும் உறுதிப்படுத்துவதற்கு இயலாதிருந்தது.

(ii) 2012 ஆம் ஆண்டின்போது அகலவத்தை நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தால் நான்கு மீள நிர்மாணிப்பு வேலைகளுக்காகச் செலவிடப்பட்ட ரூபா 2,458,151 அதிகார சபையின் 2012 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படாதிருந்தது.

(iii) இரத்தினபுரி மற்றும் கேகாலை மாகாண அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்ட முப்பத்தி மூன்று வீதியை அகலப்படுத்தவது மற்றும் அபிவிருத்தி வேலைகள் என்பன 2012 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படாதிருந்தது. அத்துடன், 2012 ஆம் ஆண்டிற்கான செயல் திட்டத்தில் காட்டப்பட்ட 33 விதிப் பராமரிப்பு நடவடிக்கைகள் மேற்படி அலுவலகங்களால் நிறைவேற்றப்படவில்லை.

(iv) அவசர வேலைகளாக இனங்காணப்பட்ட பதினொரு வேலைகள் மீளாய்வாண்டின்போது தொடங்கப்பட்டிருக்கவில்லை. அதே வேளையில், ரூபா 26,824,774 செலவில் வேறு ஆறு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

**(இ) பாலங்கள், மேம்பாலங்கள் என்பவற்றை நிர்மாணித்தலும் பழுதடைந்த அல்லது நலிவுற்றுள்ள பாலங்களை (பால வடிவமைப்பு / கிராமிய பாலங்கள்) மீள நிர்மாணித்தலும்**

2012 ஆம் ஆண்டின்போது அதிகாரசபையினது பாலங்கள் மற்றும் மேமபாலங்கள் நிர்மாணிக்கப்பட்டமை தொடர்பான ஒதுக்கீடும் உள்ளவாறான செலவினமும் பின்வருமாறு உள்ளன.

| விபரம் | ஆண்டிற்கான ஒதுக்கீடு | உள்ளவாறான செலவினம் | ஒதுக்கீட்டின் சதவீதமாக பயன்பாடு |
|---|---|---|---|
| | ரூபா.மில் | ரூபா.மில் | ரூபா.மில் |
| பழுதடைந்த அல்லது நலிவுற்ற பாலங்களை மீள நிர்மாணித்தல் - தொடர்வேலை | 573.3 | 629.5 | 109.8 |
| பழுதடைந்த அல்லது நலிவுற்ற பாலங்களை மீள நிர்மாணித்தல் - புதிய வேலை | 126.7 | 4.4 | 3.5 |
| கிராமிய பாலங்களை நிர்மாணித்தல் | 100 | 78.6 | 78.6 |

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2012 ஆம் ஆண்டின்போது 9 மாகாண அலுவலகங்களில் உள்ள பழுதடைந்த பாலங்களை மீள நிர்மாணிப்பதற்கு ரூபா 573.3 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டது. அதேவேலை ரூபா 629.5

மில்லியன் செலவழிக்கப்பட்டிருந்தது. நிர்மாண வேலைகளின் கீழ் பழுதடைந்த அல்லது நலிவுற்ற பாவங்களை மீள நிர்மாணிப்பதற்கென வருடாந்த ஒதுக்கீட்டினை விட அதிகளவு செலவினை மத்திய, வடக்கு, வட மேற்கு மற்றும் சபரகமுவ மாகாண அலுவலகங்கள் ஏற்படுத்தியிருந்தன.

(ii) 10 மாகாண அலுவலகங்களில் பாலங்களை மீள நிர்மாணிப்பதற்கான நாற்பத்தி ஏழு செயற்திட்டங்கள் இனங் காணப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், செயற்திட்டத்தில் உள்ளடங்காத ஆறு செயற்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதே வேளையில், செயல் திட்டத்தில் உள்ளடங்கிய நான்கு செயற்திட்டங்கள் 2012 டிசெம்பர் 31 வரை ஆரம்பிக்கப்படாதிருந்தன.

(iii) புதிய வேலைகளின் கீழ் ஐந்து மாவட்டங்களில் பழுதடைந்த மற்றும் நலிவுற்ற பாலங்களை மீள நிர்மாணிப்பிற்கென வழங்கப்பட்ட ஒதுக்கீட்டை மத்திய, வடக்கு, வடமத்திய ஆகிய மூன்று மாகாண அலுவலகங்கள் முற்றாகப் பயன்படுத்தியிருக்கவில்லை.

(iv) ஐந்து மாகாணங்களில் 71 பழுதடைந்த அல்லது நலிவுற்ற பாலங்கள் இனங்காணப்பட்டிருந்தபோதும், 59 பாலங்களுக்கான வேலைகள் 2012 டிசெம்பர் 31 வரை ஆரம்பிக்கப்படாதிருந்தன.

(v) கிராமிய பாலங்களை நிர்மாணிக்கும் நிர்மாண வேலைகளின் கீழ் அமுலாக்கப்படுவதற்கு இனங்காணப்பட்டிருந்த 31 செயற்திட்டங்களில் 6 செயற்திட்டங்கள் செயல் திட்டத்தில் உள்ளடக்கப்படாதிருந்தன. மேலும், 13 கிராமிய பாலங்களது நிர்மாண வேலைகள் 2012 ஆம் ஆண்டின்போது தொடங்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) அகலமாக்கலும் முன்னேற்றமும்

---

2012 ஆம் ஆண்டிற்கான அதிகார சபையின் செயல் திட்டத்திற்கமைய, 25 மாவட்டங்களில் வீதிகளை அகலமாக்குவதற்கும் முன்னேற்றுதற்குமென ரூபா 5,400 மில்லியன் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தது. செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் செலவிடப்பட்ட தொகை ரூபா 11,932 மில்லியன் ஆகும்.

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வீதிகளை விரிவாக்குவதற்கும் முன்னேற்றுதற்குமான அலுவலக 16 மாவட்ட அலுவலக ஒதுக்கீடு அதிகரித்திருந்ததுடன் முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் திட்டமிடப்பட்ட வேலைகள் 2012 டிசெம்பர் 31 ஆந் திகதிவரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. மீளாய்வாண்டில் செயல் திட்டத்தில் உள்ளடங்காத 289 வேலைகளது கிரயம் ரூபா 4,821 மில்லியனாகும்.

(ii) வருடாந்த வேலைத் திட்டத்தின் பிரகாரம், 593 வீதி அகலமாக்கல் மற்றும் முன்னேற்ற வேலைகள் இனங்காணப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின்போது செயல் திட்டத்தில் உள்ளடக்கப்படாத ரூபா 4.821 மில்லியன் கிரயமுடைய 289 வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

### 3.1.2 அதிகாரசபையின் வணிக நடவடிக்கைகள்

(அ) வலுவான கொங்கிரீட் தளம் போடும் அச்சுக்களவு (Interlock Concrete Paving Blocks) உற்பத்தி செய்தல்

அதிகார சபையின் மாகாணப் பணிப்பாளர்களுக்கு 54 வலுவான அச்சுவெட்டும் இயந்திரங்களைக் கொள்வனவு செய்வதற்கென ரூபா 52 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. இதற்கமைய, 54 இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டு நிறைவேற்று பொறியியலாளர்களது மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட்டன. இது தொடர்பாகப் பின்வருவன அவதானிக்கப்பட்டன.

(i) மூலப்பொருளின்மை, போதிய கேள்விகள் இல்லாமை, விற்பனை விலையிலும் கூடிய உற்பத்திக் கிரயம் ஆகியவற்றால் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகங்களில் உள்ள 38 இயந்திரங்கள் 2012 டிசெம்பர் 31 வரை செயற்படாதிருந்தன.

(ii) நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகங்களிலிருந்து கிடைக்கப் பெற்ற தகவல்களின் பிரகாரம், 2012 ஆம் ஆண்டின்போது பொருட் கோரல் இன்றி 100,162 குற்றிகள் கையிருப்பில் இருந்தன.

(ஆ) அஸ்பால்ட் உற்பத்திப் பொறித்தொகுதி

பலாங்கொடையில் உள்ள அஸ்பால்ட் உற்பத்திப் பொறித் தொகுதியின் உற்பத்தி வேலைகள் 2012 ஜுலை 16 ஆந் திகதியன்று ஆரம்பமாகி 1,342 மெற்றிக் தொன் வெயாரிங் கோர்ஸ் (Wearing Course) 6,103 மெற்றிக் தொன் பைன்டிங் கோர்ஸ் (Binding Course) 5,587 மெற்றிக் தொன் கட்பெக்ஸ் (Cut Backs) என்பன 2013 ஜுலை வரை தயாரிக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) உற்பத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே ரூபா 423,200 பெறுமதியான 3,680 லீட்டர் டீசல் பயன்படுத்தப்பட்டிருந்தது. டீசல் பாவனைக்கான காரணம் தொடர்பாக கணக்காய்வுக்கு விளக்கமளிக்கப்படவில்லை.

(ii) பொறித் தொகுதியில் பேணப்பட்ட ஆவணங்களுக்கமைய, 2012 ஆம் ஆண்டின்போதும் 2013 ஜுலை 16 வரையும் அஸ்பாட் உற்பத்திக்கென (வெளியேறும் உற்பத்தி) வழங்கப்பட்ட டீசல் மற்றும் மண்ணெண்ணெயின் அளவுகள் (உட்புகுத்தல்) அசாதாரண அளவில் அமைந்திருந்தமை கணக்காய்வில் புலனாகியது. ஆகவே, ஒரு மெற்றிக் தொனனிற்கு 1 லீற்றர் முதல் 17 லீற்றர் வரையான வீச்சில் அஸ்பாஸ்ட் மற்றும் மண்ணெய் ஒரு மென்றிக் தொன்னிற்கு 7 லீற்றர் முதல் 74 லீற்றர் வரை வீச்சில் சராசரி நுகர்வு இருந்ததுடன் அஸ்பால்டிற்கு மற்றும் கட்பெக் (Cut back) உற்பத்திக்குத் தேவைப்படும் டீசலின் சராசரி அளவு முறையே 9 லீட்டர் மற்றும் 5 லீட்டர் என்பனவே.

(iii) பொறித் தொகுதியை இயக்குவதற்கான மின் உற்பத்தியைப் பெறுவதற்கு, ஒரு மின் உற்பத்தி இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. இதற்குத் தேவைப்பட்ட டீசலின் அளவு ஒரு மணித்தியால இயக்கத்திற்கு 33 லீட்டர் எனும் வீதமாகும். எவ்வாறாயினும், உற்பத்திக்கான ஆவணங்கள் மற்றும் வழங்கப்பட்ட டீசலின் அளவு என்பன ஒரு மணித்தியாலத்திற்கு 15 முதல் 1386 லீட்டாா் பயன்படுத்தப்பட்டதைச் சுட்டிக் காட்டியது, இது நடைமுறைக்குப் புறம்பானதாகும்.

## 4.2 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

2008 ஆகஸ்ட் 14 ஆந் திகதிய அதிகாரசபையின் பணிப்பாளர் சபைக் கூட்டத் தீர்மானத்தின்படி, வீதிகளது புனரமைப்பு மற்றும் பிரீமிக்ஸ், ஒட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள், இமல்சன் போன்றவற்றினது கொள்வனவு என்பவற்றிற்கான கொடுக்கல் வாங்கல்களை மூன்று தனியார் கம்பனிகள் மூலம் அதிகார சபை பெற்றிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) 2012 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம், வீதிகளை விரிவாக்கி மீள நிர்மாணிப்பதற்கும் பராமரிப்பதற்குமென மீளாய்வாண்டின்போது வீதி அபிவிருத்தி அதிகார சபை செலவிட்ட தொகை ரூபா 23,822 மில்லியனாகும். மேற்படி கம்பனிகளில் ஒன்றே வீதிகளை விரிவாக்கி அவற்றை மீள நிர்மாணிக்கும் ஒப்பந்தங்களில் ஈடுபட்டிருந்தமை கணக்காய்வில் புலனாகியது. எவ்வாறாயினும், ஆண்டின் இறுதியில் உள்ளவாறு பிராந்திய மட்டத்தில் நடைபெற்ற வேலைகளது முன்னேற்றம் தொடர்பான தகவல்களை அதிகார சபை வழங்கவில்லை.

(ii) மேற்குறிப்பிட்ட கம்பனிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிர்மாண மற்றும் உசாத்துணைச் சேவைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குக் கிடைக்குமாறு செய்யப்படவில்லை.

(iii) ஒரு கம்பனியுடனான கொடுக்கல் வாங்கல்களில் பெற வெண்டியனவாக அதிகாரசபையின் நான்கு பேரேட்டுக் கணக்குகளில் காட்டப்பட்ட ரூபா 1,236,424,625 கூட்டுத் தொகையுடைய ரூபா 1,685,544,068 ஆகக் காட்டப்பட்ட மீதிகளைக் குறித்த கம்பனி நேரடியாகவே உறுதி செய்திருந்ததுடன் நிலவிய ரூபா 449,119,443 வித்தியாசத்திற்கு விளக்கமளிக்கப்படவில்லை.

(iv) மேற்படி இரு கம்பனிகளுடனுமான கொடுக்கல் வாங்கல்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகையாக அதிகார சபையின் மூன்று பேரேட்டுக் கணக்குகளில் காட்டப்பட்ட ரூபா 44,189,194 மீதியை நேரடியாக உறுதி செய்யும்போது அத்தொகையை ரூபா 3,185,346,898 ஆகக் குறிப்பிட்டமையால் ரூபா 3,141,157,704 வித்தியாசம் நிலவியது. அவதானிக்கப்பட்ட இவ்வித்தியாசத்திற்கு விளக்கமளிக்கப்படவில்லை.

(v) மேற்படி கம்பனிகளில் ஒன்றுடனான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாகக் கொடுப்பனவு செய்ய வேண்டியனவாக அதிகார சபையின் பேரேட்டுக் கணக்குகளில் காட்டப்பட்ட ரூபா 35,429,053 கூட்டுத் தொகையுடைய மீதியை கம்பனி நேரடியாக உறுதி செய்தபோது அதனை ரூபா 51,291,044 எனக் குறிப்பிட்டதன் மூலம் ஏற்பட்ட ரூபா 15,861,991 க்கு விளக்கமளிக்கப்படவில்லை.

(vi) மேற்படி இரு கம்பனிகளுடனான கொடுக்கல் வாங்கல்களின் மீது அதிகாரசபையின் பேரேட்டுக் கணக்குகளில் பெறுவனவாகக் காட்டப்பட்ட மீதிகளைக் குறித்த கம்பனிகள் உறுதி செய்யவில்லை.

(vii) அரசாங்க கொள்வனவு வழிகாட்டி 2006 இன் 3 ஆம் அத்தியாயத்தின் பிரகாரம், கொள்வனவு நடைமுறைகளைக் கடைப்பிடிக்காது அதிகாரசபையால் மேற்படி கம்பனிகளுக்கு சில ஒப்பந்தங்கள் நேரடியாகவே வழங்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது. கொள்வனவு நடைமுறைகளைக் கடைப்பிடிக்காது மேற்படி கம்பனிகளுக்கு ஒப்பந்தங்களை வழங்குவதற்கான அமைச்சரவைத் தீர்மானம் 2013 பெப்ரவரி 04 ஆந் திகதியன்று பெறப்பட்டதாக அதிகாரசபையின் தலைவர் அறிவித்திருந்தார்.

**3.3 ஒப்பந்த நிர்வாகம்**

**3.3.1 வீதிப் புனரமைப்பும் முன்னேற்றமும்**

(அ) உள்ளூர் வங்கிகளால் நிதியளிக்கப்படும் வீதிப் புனரமைப்புச் செயற்திட்டம் (எல்பீஎவ்ஆர்ஆர்பி)

2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய அமைச்சரவைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டவாறு தீவடங்கிலுமுள்ள 600 கிலோ மீட்டர் முன்னுரிமை வீதிப் புனரமைப்பு வேலைகளுக்கு உள்ளூர் வங்கிகளிலிருந்து 500 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்குச் சமமான ரூபா 55,915 மில்லியனைக் கடனாகப் பெறுவதற்கான அதிகாரத்தை அதிகாரசபை பெற்றிருந்தது. ஆகவே, 2013 ஜுன் 30 இல் உள்ளவாறு 543.36 கிலோ மீட்டர் மொத்த நீளமான 19 வீதிகளைப் புனரமைப்பதற்கு ரூபா 50,319,762,550 ஒப்பந்தப் பெறுமதியாக உள்ளூர் வங்கிகளால் வழங்கப்பட்டிருந்தன. 2011 பெப்ரவரி 09 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய, புனரமைப்பதற்கென அதிகாரசபையால் தெரிவு செய்யப்பட்ட வீதிகளுக்கான தொழில்நுட்ப மற்றும் நிதிசார் முன்மொழிதலைத் தயாரிப்பதற்கான அனுமதி C1 தரத்திலான

வீதிகளை நிர்மாணிப்பதற்காக நிர்மாணம் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகத்தில் (ஐசீரீஏடி) பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வங்கிகளால் ஒப்பந்தகாரர்களுக்குக் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய தொகையிலும் கூடுதலாக ரூபா 49,308,245 பற்றுதலை மேற்கொண்ட அதிகாரசபை அதனை நிறுத்தி வைத்த மற்றும் நிர்மாணக் கைத்தொழில் நிதியத் தீர்வைக் கொடுப்பனவிற்குப் பயன்படுத்தியிருந்தது. ஆகவே, கூடுதலாகப் பற்றுதலுக்குள்ளான தொகைக்கான வட்டியையும் அதிகாரசபை செலுத்த வேண்டியிருந்தது.

(ii) அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டவாறு, அதிகாரசபையால் தெரிவு செய்யப்பட்டு குறித்த வீதிகளது போட்டியுடனான கூறுவிலைக் கோரலின்போது அழைப்பு விடுக்கப்பட்டிருந்த ஒப்பந்தகாரருக்கே ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒரு கிலோமீட்டருக்கு முன்மொழியப்பட்டு அதிகாரசபையும் ஒப்பந்தகாரர்களும் உடன்பாட்டிற்குள்ளான சாரசரி விலை வீதிக்கு வீதி மாற்றம் உடையதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும், வீதங்களுக்கான நெடுஞ்சாலைப் பட்டோலையில் (எக்ஸ்ஆர்) குறிப்பிட்டவாறு, கிரய மதிப்பீட்டிற்கான கணிப்பீட்டின்போது வீதங்கள் சேர்த்துக்கொள்ளப்படலாகாது என்றபோதும், குறித்த விலைகளில் 35 சதவீத இலாப எல்லை சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) கேகாலை மாற்று வழிப்பாதை (2.06 கிலோமீற்றர்)
---

கேகாலை நகரில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் நோக்குடன் 2008 ஆம் ஆண்டில் ஆரம்பமாகிய இருகட்டச் செயற்திட்டம் 2012 டிசெம்பர் 31 ஆந் திகதி வரையும் பூர்த்தியடையாக்கப்பட்டிருக்கவில்லை.

கட்டுப்பாட்டு முறைமையில் உள்ள பின்வரும் நலிவுகளால் காரணமாக வேலைச் செயலாற்றல் திருப்தி அற்றதாக இருந்தது.

(i) நேரடித் தொழில் அடிப்படையில் ரூபா 81.61 மில்லியன் மதிப்பீட்டில் 2008 ஆம் அண்டு தொடங்கிய கட்டம் - 1 இன் வேலை பின்னர் ரூபா 169.73 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் மகநெகும வீதி

நிர்மாண வேலைக் கம்பனியிடம் கையளிக்கப்பட்டிருந்தது. 2 ஆம் கட்ட வேலையும் நெரடித் தொழில் அடிப்படையில் ரூபா 35.79 மில்லியன் கிரயத்தில் 2010 ஆம் ஆண்டு ஆரம்பமாகியிருந்து. எவ்வாறாயினும், வேலை மந்தம் காரணமாக 2011 நவெம்பரில் வேறாக ஒரு செயற்திட்ட அலுவலகம் அமைக்கப்பட்டிருந்தது.

(ii) நேரடித் தொழில் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் பொருட்டு கேகாலை செயற்திட்ட பிரதம பொறியியலாளர் அலுவலகம் வேறாக ஒரு பேரேட்டைப் பேணாதிருந்தது. ஆகவே, செயற்திட்ட அலுவலகத்தால் செலவிடப்பட்ட மொத்தத் தொகையான ரூபா 403,915,173 சம்பந்தமான விபரத்தைக் கணக்காய்வில் பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

(iii) அதிகாரமளிக்கப்பட்ட ரூபா 3 மில்லியன் எல்லைக்குள் கொடுப்பனவுகளுக்கான அங்கீகாரத்தைப் பெறும் நோக்குடன் செயற்திட்ட அலுவலகமானது வேலைகளைக் கூறு போட்டு அவற்றை ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கியிருந்தது. எவ்வாறாயினும், பிரிக்கப்பட்ட வேலைகள் ஒரே ஒப்பந்தகாரருக்கே வழங்கப்பட்டிருந்தமை அவதானிக்க்பபட்டது.

(iv) பதிவு செய்யப்படாத வழங்குநர் ஒருவரிடமிருந்து ரூபா 131,807,232 பெறுமதியான கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(இ) தனகொலவத்த பாலம் - கேகாலை மாவட்ட (கிராமிய பாலங்கள் பிரிவு)

பால நிர்மாண வேலை 2011 ஜூலை 27 ஆந் திகதியளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. முடிவடையவிருந்தது. எவ்வாறாயினும், 2013 பெப்ரவரி 13 ஆந் திகதியளவிலும் ரூபா 22,557,650 பெறுமதியான வேலைகள் முடிவடையாதிருந்தன. தலைவர் பின்வருமாறு பதிலளித்திருந்தார். “வேலை நடைபெறும் இடத்திற்கும் பொருட்களையும் இயந்திர சாதனங்களையும் கொண்டு செல்வதில் நிலவிய போக்குவரத்து இடர்கள் காரணமாக தாமதம் ஏற்பட்டது. எவ்வாறாயினும், ஒப்பந்தகாரரால் வேலை தொடரப்படுகின்றது”.

(ஈ) வேயங்கொடவில் உள்ள 33/1 ஆம் இலக்கப் பாலம் - றுவன்வெல வீதி

மேற்படி பாலத்தினது நிர்மாண வேலைக்கான ஒப்பந்தம் ரூபா 74,171,053 கிரயத்தில் அரச கூட்டுத்தாபனம் ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. நான்கு தடவைகள் கால நீடிப்பு வழங்கப்பட்டும் 2012 டிசெம்பர் 31 ஆந் திகதியன்றும் வேலை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், விலைத்தளம்பல் காரணமாக, கொடுப்பனவு செய்யப்படக்கூடிய தொகையிலும் கூடுதலாக ரூபா 3,500,030 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(உ) தெஹியோவிட்டவில் உள்ள உறுப்பெல்லவ தொங்கு பாலம் - தெரணியகல – நூரிய வீதி

தொங்குபாலத்திக் உப அமைப்பினது நிர்மாண வேலைக்கான ஒப்பந்தம் ரூபா 1,715,377 தொகையில் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 பெப்ரவரி 13 ஆந் திகதியளவிலும் நிர்மாண வேலையின் உச்சக் கட்ட அமைப்பு பூர்த்தி செய்யப்படாதிருந்தது.

(ஊ) மிரிஸ்வத்த – வதுறுகம வீதி (கம்பஹா பிரதம பொறியியலாளர் அலுவலகம்)

மிரிஸ்வத்த – வதுறுகம வீதியைப் புனரமை மற்றும் மீள நிர்மாணிப்பு (0+000 கி.மீ தொடக்கம் 5+000 கி.மீ வரை) வேலைகள் ரூபா 36,734,093 கிரயத்தில் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு 2011 செப்டம்பர் 15 ஆந் திகதியன்று வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) வேலையைத் தொடங்குவதற்கான முற்பணத்தை வழங்குவதில் தாமதம், காணிச் சுவீகரிப்புத் தகராறுகள், தற்போதுள்ள உப அமைப்புக்களை அகற்றுதல் போன்றவற்றால் ஒப்பந்தகாரர் வேலையைத் தாமதித்து ஆரம்பிக்க வேண்டியதாயிற்று. பின்னர், 2013 மே 15 ஆந் திகதியன்று ஒப்பந்தகாரர் வேலையைத் தொடராது கைவிட்டதுடன் ரூபா 2,046,982 முற்பணமானது அறவிடப்படாதுமிருந்தது.

(ii) 2012 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் காணிச் சுவீகரிப்பு வேலைகள் முடிவடையாதிருந்தன. 2011 செப்டம்பரில் அதிகார சபையால் மஹர பிரதேச செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட ரூபா 4,803,000 தொகையானது சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கான

இழப்பீடு வழங்கப்படாதும் குறித்த தேவைக்குப் பயன்படுத்தப்படாதும் 2013 ஆகஸ்ட் 31 ஆந் திகதியன்றும் மஹர பிரதேச செயலக வைப்புக் கணக்கொன்றில் இடப்பட்டிருந்தது.

(எ) மகநெகும அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் (சபரகமுவ மாகாணப் பணிப்பாளர் அலுவலகம்)

---

2012 ஆம் ஆண்டிற்கென ரூபா 22,000,000 க்கான 35 குற்றிகளைக் பதித்து வீதிகளை நிர்மாணிக்கும் வேலைகளுக்குத் திட்டமிடப்பட்டது. அதில் 8 வேலைகள் மாத்திரமே 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும் 12 வேலைகள் நடைபெற்றவாறிருந்ததுடன் 15 வேலைகள் ஆரம்பிக்கப்படாதுமிருந்தன. இவ்வாறு பல குற்றிகளைப் பதித்து வீதிகளை நிர்மாணிக்கும் / கொங்கிரீட் இடுதல் வேலைகள் மகநெகும வீதி நிர்மாணம் மற்றும் உபகரணக் கம்பனியிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தன. ரூபா 107,280,376 கிரயமுடைய 6 வீதி நிர்மாண வேலைகள் 2012 டிசெம்பர் 12 ஆந் திகதி அன்று கணக்காய்வுக் களப் பரிசோதனைகளுக்குள்ளானபோது தரம் குறைந்த வேலை காரணமாக வீதியின் மேற்தளத்தில் பல்வேறு வெடிப்புகள் இருந்தமை புலனாகியது.

(ஏ) ஹொரண – அங்குறுவாதொட – அலுத்கமை வீதி (ஹொரண நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம்)

---

தெற்கு அதிவேகப் பாதைத் திறப்பைக் கருத்திற்கொண்டு அவசரகால அடிப்படையில் ஹொரண – அங்குறுவாதொட – அலுத்கம வீதியின் இரு பிரிவுகளில் அஸ்பாள் போடப்படுவதற்கான ஒப்பந்தம் இரு ஒப்பந்தகாரர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. வீதியின் 42+300 கி.மீ தொடக்கம் 44+ 600 கி.மீ பிரிவில் அஸ்பாள் இடப்படுவதானது பெறுமதி சேர் வரி நீங்கலாக ரூபா 31,097,750 விலை கோரலுக்கு வழங்கப்பட்டிருந்தது. இப்பெறுமதியானது பொறியியலாளரின் மதிப்பீட்டை விட 19 சதவீதம் அதிகமாக இருந்தது. வீதியின் 45 + 000 கி.மீ தொடக்கம் 47 + 000 கி.மீ பிரிவில் அஸ்பாள் இடப்படுவதற்கான ஒப்பந்தம் பெறுமதிசேர் வரி நீங்கலாக ரூபா 26,335,320 விலை கோரலில் வழங்கப்பட்டிருந்தது. இப்பெறுமதியானது பொறியியலாளரின் மதிப்பீட்டை விட 10 சதவீதம் அதிகரித்திருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) ஒப்பந்தகாரரால் 2011 நவெம்பர் 24 அன்று ஆரம்பிக்கப்பட்ட அஸ்பாள் பதிக்கும் வேலை 3 நாட்களுக்குள் அதாவது 2011 நவெம்பர் 26 அன்று முடிவடைந்திருந்தது. எவ்வாறாயினும், ஒப்பந்தக் கோவையின் மூலம் சேகரிக்கப்பட்ட தகவல்களுக்கு அமைய, 2011 நவெம்பர் 19 அன்றே ஒப்பந்தகாரர் தனது விலை கோரலைச் சமர்ப்பித்திருந்தார். ஆகவே, சாதாரண விலை கோரல் நடைமுறைகள் வேலை முடிவுற்றதன் பின்னரே கடைப்பிடிக்கப்பட்டிருந்தன.

(ii) 42+300 கி.மீ தொடக்கம் 44 + 600 கி.மீ வரையான வீதிப் பிரிவில் இமல்சனை உபயோகிக்கப்பட்ட வீதி அடையாளமிடல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட அளவீடுகளின் பிரகாரம், அஸ்பால்ட் இடப்பட்ட மொத்த விஸ்தீரணம் 12,949.23 சதுர மீட்டராகும். 50 மில்லி மீட்டர் கனமான அஸ்பால்ட் பதிக்கும் நியமத்தைக் கருத்திற் கொள்ளுமிடத்து, கன மீட்டர் ஒன்றிற்குத் தேவையான அஸ்பால்ட் முற் கலவை (கன மீட்டர் ஒன்றிற்கு 2.35 மெற்றிக்தொன்) 1,521.53 மெற்றிக் தொன் ஆகும். எவ்வாறாயினும், 1,865 மெற்றிக் தொன்னுக்கான கொடுப்பனவு வழங்கப்பட்டதால் 343.47 மெற்றிக் தொன்னிற்கு ரூபா 5,323,785 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. மேலும், அஸ்பாள் பைன்டர் கோட் (Asphalt binder coat) டுக்கான அதிகார சபையின் கொடுப்பனவு உள்ளபடியான அளவைகளின் அடிப்படையில் அமையாது பொருட்களை ஏற்றி, இறக்கிய வாகனங்களது எண்ணிக்கையின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது.

(iii) டிரெக் கோட் இமல்சனைப் (Track coat Imulsion) பயன்படுத்தி வீதி அடையாளமிடலிற்காக மேற்கொள்ளப்பட்ட அளவைகளின் பிரகாரம், 45+000 தொடக்கம் 47 + 000 வரையான கிலோ மீட்டருக்குரிய வீதிப் பிரிவின் நீளமும் அகலமும் அஸ்பாள் பதிப்பதற்கான பிரதேசத்தின் மொத்த விஸ்தீரனம் 5,124.3 சதுர மீட்டராகும். அஸ்பாள் பதிப்பதற்கான 50 மில்லி மீட்டர் திண்மத்திற்கான நியமத்தைக் கருத்திற் கொள்ளுமிடத்தும் அதற்கான கன மீட்டர் ஒன்றிற்குத் தேவைப்படும் அஸ்பாள் முற்கலவையைக் கருத்திற் கொள்ளுமிடத்தும் (அதாவது கன மீட்டர் ஒன்றிற்கு 2.35 மெற்றிக் தொன்) மேற்படி வீதிப் பிரிவுக்குத் தேவைப்படும் அஸ்பாள் 602.10 மெற்றிக் தொன் ஆகும். (5,124.30X0.05X2.35) எவ்வாறாயினும், ஒப்பந்தகாரருக்கு உள்ளபடியான செலுத்தப்பட்ட தொகை 680.25

மெற்றிக் தொன்னுக்கு உரியதாகும். இதன் காரணமாக, 8.15 மெற்றிக் தொன்னுக்கு ரூபா 1,067,529 கூடுதலாக ஒப்பந்தகாரருக்கு வழங்கப்பட்டிருந்தது. மேலும், அஸ்பாள் பைன்டர் கோர்ஸ் (Asphalt binder course) க்கான அதிகாரசபையின் கொடுப்பனவு உள்ளபடியான அளவைகளின் அடிப்படையில் அமையாது பொருட்களை ஏற்றி, இறக்கிய வாகனங்களது எண்ணிக்கையின் அடிப்படையிலேயே அமைந்திருந்தது என அவதானிக்கப்பட்டது.

(ஐ) ஹோலி கிறொஸ் சுற்றுவட்ட அபிவிருத்தி (களுத்துறை பிரதான பொறியியலாளர் அலுவலகம்)

---

களுத்துறை ஹோலி கிறொஸ் கல்லூரி சந்தியில் அமைந்துள்ள சுற்றுவட்ட அபிவிருத்திக்கான ஒப்பந்தம் 2011 மே 09 அன்று ரூபா 8.34 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயத்தில் தனியார் ஒருவருக்கு வழங்கப்பபட்டிருந்தது. சுற்றுவட்ட அபிவிருத்திக்கான பிரமாணப் பட்டியலின் பிரகாரம் ஒப்பந்தகாரரால் ரூபா 12,541,605 பெறுமதியான 1,500 லீனியர் மீட்டர் கார்ட் ரெயில்ஸ் (Guara Rails) வழங்கப்பட்டிருந்தன. அளவீட்டுப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட அளவிலும் பார்க்க இது மிகக் குறைவானதாக இருந்தது. ஆகவே, ரூபா 6,726,506 பெறுமதியான லீனியர் மீட்டர் கார்ட் 807.5 ரயில்ஸ் (Guard rails) பிரதான பொறியியலாளர் அலுவலகத்தால் வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு எஞ்சிய ரூபா 2,574,990 பெறுமதியான 306 லீனியர் மீட்டர் கார்ட் ரெயில்ஸ் (guard rails) அலுவலக வளாகத்தில் பாதுகாப்பின்றி வைக்கப்பட்டிருந்தன.

(ஒ) பாணந்துறை நகரில் உள்ள பஸ் தரிப்பிடச் சந்தியை அபிவிருத்தி செய்தல்

---

பாணந்துறை நகரில் உள்ள பஸ்தரிப்பிடச் சந்தியை அபிவிருத்தி செய்யும் வேலைக்கான ஒப்பந்தம் ரூபா 45.5 மில்லியன் பெறுமதியில் 2011 ஒக்டோபர் 17 இல் தொடங்குவதாம் எதரிப்பார்க்கப்பட்டிருந்ததுடன் 2012 ஜனவரி 17 க்கு முன்பு நிறைவடையவிருந்தது. 2011 டிசெம்பர் 19 ஆந் திகதியன்று வேலையைத் தொடங்குவதற்கான முற்பணமாக ரூபா 4.53 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வேலை ஆரம்பிக்கப்படாது 2012 டிசெம்பர் 31 ஆந் திகதியன்று ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. வேலையைத் தொடங்குவதற்கு வழங்கப்பட்ட முற்பணம் 2013 ஜுன் 31 வரை அறவிடப்படாதிருந்தது.

இது தொடர்பாக அதிகாரசபையின் தலைவர் உலக வங்கிச் செயற்திட்டத்தின் கீழ் வேலையை நிறைவேற்றுவதற்கு இனங்காணப்பட்டுள்ளதால் ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டதென்றும் ஒப்பந்தகாரரிடமிருந்து வேலையைத் தொடங்குவதற்கு வழங்கப்பட்ட முற்பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் கூறியிருந்தார்.

(ஓ) தெற்கு அதிவேகப் பாதையில் இளைப்பாறும் பகுதியில் வீதிப் புனரமைப்பு வேலைகள் (அகலவத்தை பிரதான பொறியியலாளர் அலுவலகம்)

வேலைக்கென மதிப்பிடப்பட்ட தொகை ரூபா 24,170,198 ஆகும். இது நான்கு பிரதான வேலைகளை உள்ளடக்கியதாகும். அவையாவன, தெற்குப் போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்ட இளைப்பாறுமிடத்திலும் உள்ளக வீதிகளிலும் அஸ்பாள் பதித்தல், எரிபொருள் நிரப்பு நிலையத்திற்கான மண்ணை வெட்டி அகற்றுதல், உட்புகு வீதிகளில் அஸ்பாள் பதித்தல் மற்றும் கொங்கிரீட்டால் வேயப்பட்ட இரண்டு 0.6 சுற்றளவு குழாய் மதகுகளை நிர்மாணித்தல் என்பனவாகும். நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம் இவ்வேலைகளை நேரடித் தொழிலாளர்களின் மூலம் ரூபா 17,739,681 கிரயத்தில் பூர்த்தி செய்திருந்தது.

இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) இவற்றின் மீதான கிரயத்தை தெற்கு போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்ட ஒப்பந்தகாரர் அல்லது இளைப்பாறுமிடத்திற்குரிய குத்தகையாளரிடமிருந்து (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம்) அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காது வீதிப் பராமரிப்புக் கிரயமாக கருதப்பட்டிருந்தது.

(ii) தெற்கு போக்குவரத்து அபிவிருத்திச் செயற்திட்டத்தினது இளைப்பாறுமிடத்தின் திறப்பு விழாவின் போது ‘‘இளைப்பாறுமிடத்திற்கான உட்புகு வீதி’’என மேலதிகமாக இறப்பர் தோட்ட சுற்று வட்ட வீதி எனும் பெயரிலான வீதிக்கு அகலவத்தை நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகம் ரூபா 2,666,443 கிரயத்தில் அஸ்பாள் பதித்திருந்தமை அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், இவ் வீதியின் 420 மீட்டர் நீளம் பொது மக்களால் தற்போது பயன்படுத்தப்படாது இருந்தது.

**3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) அதிவேகப் பாதை முகாமைத்துவ பிரிவு

அதிவேகப் பாதையில் பணியாற்றும் பொலிஸ் திணைக்களக் பிரிவின் நிர்வாகச் செலவினமாக ரூபா 40,201,167 ஆண்டின்போது செலவிடப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும், பொலிஸ் திணைக்களம் வழங்கும் சேவைகளின் தன்மை மற்றும் அதிகாரசபை செலவிட வேண்டிய தொகை தொடர்பாக பொலிஸ் திணைக்களத்துடன் அதிகாரசபை புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருக்கவில்லலை.

(ஆ) அரச காணிகளை இறையில் காணிகளுக்காக பரிமாற்றம் செய்தல்

(i) நெடுஞ்சாலைகள் திணைக்களத்திடமிருந்து பரிமாற்றஞ் செய்யப்பட்ட நாராஹேன்பிட்டியில் உள்ள 77 பேர்ச் அரச காணி 2007 ஆம் ஆண்டு முதல் மத சார்புடைய நிறுவனம் ஒன்றினால் பயன்படுத்தப்படுவதற்கு அனுமதிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 ஜுன் 30 ஆந் திகதியன்றும் காணியின் சட்டபூர்வ உரித்து மாற்றஞ் செய்யப்படாதிருந்தது. மேலும், சனாதிபதி செயலகத்தின் 2010 பெப்ரவரி 03 ஆந் திகதிய எஸ்பீ/ஆர்டீ/02/10 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் காணி ஆணையாளரின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) மேலும், டென்சில் கொப்பேகடுவ வீதியில் உள்ள மற்றுமொரு காணி வீதி அபிவிருத்தி அதிகார சபையால் நகர அபிவிருத்தி அதிகார சபையிடமிருந்து பெறப்பட்டிருந்ததுடன் குறித்த மத சார்புடைய நிறுவனத்திற்கு 2007 முதல் 2010 வரை 3 சந்தர்ப்பங்களில் மேற்குறிப்பிடப்பட்ட நாராஹேன்பிட்டிய காணிக்கு இழப்பீடாக ரூபா 50 மில்லியன் வழங்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக 2009 நவெம்பர் 19 ஆந் திகதியன்று அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. ஆகவே, அரச காணி ஒன்றை இறையில் காணி ஒன்றிற்கு பரிமாற்றஞ் செய்து குத்தகைக்கென அதிகாரசபை செலவழித்த ரூபா 50 மில்லியன் மொத்தக் கிரயத்தின் ஒரு

பகுதியாகிய ரூபா 30 மில்லியனை மூலதனப்படுத்தியதற்கான காரணத்தைக் கணக்காய்வில் நிர்ணயிக்க முடியாதிருந்தது.

(இ) அரச காணிகளுக்காகப் பரிமாற்றஞ் செய்யப்பட்ட இறையில் காணிகள்

2009 நவெம்பர் 19 இல் அமைச்சரவை மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம், டென்சில் கொப்பேகடுவ மாவத்தையில் உள்ள காணிக் குத்தகையாக நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு ரூபா 1000 வருடாந்தக் குத்தகைப் பணமாக வழங்கப்பட வேண்டியிருந்தது. எவ்வாறாயினும், வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை ஆகியவற்றால் கைச்சாத்திடப்பட்ட 2008 ஆகஸ்ட் 27 ஆந் திகதிய 1432 ஆம் இலக்க குத்தகை உடன்படிக்கையின்படி 50 ஆண்டுகளுக்கு மேலாக ரூபா 7 மில்லியன் வருடாந்த குத்தகைப் பணமாக வழங்கப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டவாறு வருடாந்த குத்தகை வாடகையைக் குறைப்பதற்கான மீளாய்வு செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

மேலும், 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களில் நிதியேற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும், ஆரம்பக் கொடுப்பனவை விட குத்தகை வாடகை எதுவுமே செலுத்தப்படவுமில்லை. குத்தகைக்கான உடன்படிக்கைப் பிரகாரம் செலுத்தப்படாதுள்ள மீதிகளுக்குத் தண்டப் பணம் செலுத்தப்பட வேண்டும். ஆகவே செலுத்தப்படாதிருக்கும் குத்தகை வாடகை மீது ரூபா 12,546,572 தண்டப்பணமாக அறவிடப்பட வேண்டியுள்ளது.

### 3.5 பயனற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) பாலங்களை மீள நிர்மாணிப்பதற்கான வடிவமைப்பு

2004 - 2008 ஆம் ஆண்டின்போது தீவில் உள்ள பாலங்களுக்கான சாத்தியக்கூறு ஆய்வுகளும் அவற்றிற்கான விரிவான வடிவமைப்பும் ரூபா 1,657,380,806 கிரயத்தில் மேற்கொள்ளப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், 2011-2012 ஆம் ஆண்டின்போது குறித்த செயற்திட்டத்தால் வடிவமைக்கப்பட்ட 18 பாலங்கள், பால வடிவமைப்புப் பிரிவால் மீண்டும் வடிவமைக்கப்பட்டிருந்தன. உள்ளூர் வங்கியால் நிதியளிக்கப்பட்ட வீதிப் புனரமைப்புச் செயற்திட்டத்தின் கீழ் அமுலாக்கப்பட்ட கலிகமுவ – றுவன்வெலைப் பாதையில் பாலங்களை

வடிமைத்து நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ரூபா 2,472,357,070 கிரயத்தில் ஒப்பந்தகாரர் ஒருவருக்கு வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த வீதியினது வடிமைப்பு வேலை அதிகாரசபையின் பாலங்கள் வடிவமைப்புப் பிரிவாலாயே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) வட்டி செலுத்த வேண்டிய கைமாறல்கள்

உள்ளூர் வங்கிகளால் நிதியளிக்கப்பட்ட வீதிப் புனரமைப்புச் செயற்திட்டத்தின் கீழ் வங்கிகளுடன் செய்து கொள்ளப்பட்ட கடன் உன்படிக்கைகளின் 8 ஆம் உட்பிரிவுக்கமைய, ஒப்பந்தகாரருக்குச் செலுத்த வேண்டிய தேறிய தொகைக்குச் சமமானதொரு தொகையைக் குறித்த வங்கிகளிலிருந்து பற்றுதல் செய்ய வேண்டும். எவ்வாறாயினும், இரண்டு ஒப்பந்தகாரர்களுக்குக் கொடுப்பனவு செய்ய வேண்டிய பிடித்து வைத்தல் தொகையான ரூபா 7,643,468 வங்கிகளிலிருந்து 2012 ஏப்ரலில் மேலதிகமாகப் பற்றுதல் செய்யப்பட்டிருந்தது. மேலதிக தொகையானது 2012 ஆகஸ்ட் 09 ஆந்திகதியன்று வங்கிகளுக்குத் திருப்பிச் செலுத்தப்பட்டிருந்தது.

(இ) வீதி முன்னுரிமை செயற்திட்டத்திடமிருந்து பெறுமதிசேர் வரியைக் கழித்தல்

நிதிக் கொள்கைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினது 2012 ஜுலை 10 ஆந்திகதிய ஈபீ/06/20/03/0360 ஆம் இலக்கக் கடிதத்தின் பிரகாரம், முன்னுரிமை வீதிச் செயற்திட்டத்தின் புனரமைப்பின் கீழ் செயற்படும் சகல ஒப்பந்தங்களுக்கும் வரி விலக்கு அளிக்கப்படும். ஒப்பந்தகாரரின் விலைப்பட்டியலிருந்து ரூபா 17,593,594 பெறுமதி சேர் வரியாகக் கழிக்கப்பட்டு 2012 ஏப்ரல் 02 ஆந் திகதியன்று உள்நாட்டு இறைவரித் ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

இழப்பீட்டிற்கான கோரல் தாமதமாகியமையால் அல்லது காப்புறுதியாளரின் முன்கூட்டிய அங்கீகாரமின்றி பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்பட்டதால் 3 மோட்டார் வாகனங்களினது விபத்துக்கான இழப்பீடு கோரபட்டிருக்கவில்லை. 2011 ஆம் ஆண்டில் விபத்திற்குள்ளான மற்றுமொரு வாகனத்திற்கான காப்புறுதிக் கோரிக்கை அதிகாரமற்ற பயணம் என விபரிக்கப்பட்டு கொடுப்பனவு மறுக்கப்பட்டிருந்தது. பின்னர், 2012 ஏப்ரலில் வாகனம் பழுதுபார்க்கப்பட்டு அதன் கிரயமான ரூபா 1,147,680 அதிகாரசபையின் வருமானத்திற்கெதிரே பதிவழிக்கப்பட்டிருந்தது.

பொறுப்பானவர்களிடமிருந்து இழப்பீட்டை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

**3.7 சொத்து முகாமைத்துவம்**

(அ) வேலைத்தளம் - அங்குலானை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) சகல வாகனங்களையும் இயந்திர சாதனங்களையும் பழுதுபார்ப்பதற்கும் பராமரிப்பதற்குமான பூரண உபகரணங்களுடனான வாகனப் பராமரிப்பு வேலைத்தளம் ஒன்று அதிகாரசபையிடம் அங்குலானையில் உள்ளபோதும், வாகனங்களைப் பழுதுபார்ப்பதற்கென 2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகார சபையால் ரூபா 74,006,655 செலவிடப்பட்டிருந்தது. வீதி அபிவிருத்தி அதிகாரசபை வேலைத்தளத்தைப் பயன்படுத்தாது வாகனங்களுக்கான பெருமளவு பழுதுபார்த்தல் வேலைகள் வெளிப்புற கராஜ்களிலேயே நடைபெற்றிருந்தன.

(ii) பணிப்பாளர் சபையிடமிருந்து பெறப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம், வேலைத்தளத்தில் வாகனச் சேவை நடவடிக்கைகள் 2011 நவெம்பர் 02 ஆந் திகதியிருந்து ஆரம்பமாகியிருந்தன. வாகனச் சேவை வேலைகளை அரச நிறுவனங்களுக்கும் மகநெகும கம்பனிகளுக்கும் விரிவாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டபோதும், தற்சமயம் அதிகார சபையினது மேல் மாகாண வாகனங்களுக்கான சேவைகளுக்கு மாத்திரமே அவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

(iii) பழுதுபார்த்தலில் தாமதம் நிலவுவது அவதானிக்கப்பட்டது. வேலைத்தளத்திற்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தரது விளக்கப்படி மெக்கானிக்குகள், மின்சாரத் தொழில்நுட்பவியலாளர்கள், உதவியாளர்கள் போன்ற பதவியணியினரது பற்றாக்குறையே தாமதத்திற்கான காரணமாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

(ஆ) காணிகள்

(i) நாராஹேன்ட்டியில் உள்ள காணி 34 துண்டுகளாக்கப்பட்டிருந்ததுடன் அதில் 13 துண்டுகள் பேஸ்லைன் வீதிச் செயற்திட்டத்தால்

இடம்பெயர்ந்தோருக்கு வழங்கப்பட்டுள்ளது. பகிரப்படாதிருந்த மீதியாக உள்ள 21 துண்டுகளும் ஏனைய 2 காணிகளும் குறித்த தேவைகளுக்குப் பயன்படுத்தப்படாது பயன்படுத்திருந்தன.

(ii) இதேவாறு, 2010 ஆம் ஆண்டில் ஒறுகொடவத்தையில் உள்ள 2 ஹெக்டெயார் காணி சுவீகரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2013 டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் வதிவிடத்தவர்களுக்கு சட்டபூர்வ உரித்தை மாற்றஞ் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்தது.

(இ) மோட்டார் வாகனங்கள்

2012 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபைக்குச் சொந்தமான 55 வாகனங்கள் வெளி நபர்களால் பயன்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) மருதானையில் உள்ள பிரதான களஞ்சியம்

2000, 2001 ஆம் ஆண்டுகளில் மத்திய பொறியியல் உசாத்துணைப் பணியகத்தால் வழங்கப்பட்ட மானியத்தின் மூலம் ரூபா 32,679,741 பெறுமதியான உபகரணங்கள் அதிகாரசபையின் பணிப்பாளரது (இயந்திரவியல்) வேண்டுகோளின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், அச் சொத்துக்கள் குறித்த தேவைகளுக்குப் பயன்படுத்தப்படாது 12 ஆண்டுகளுக்கு மேலாக களஞ்சியத்தில் இருந்தன.

(உ) நாகொடை – கலாவெல்லவவில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான விடுதிகள்

நாகொடை – காலாவெல்லவவில் உள்ள உத்தியோகத்தர்களுக்கான விடுதிகள் சேதமுற்றவாறிருந்தது. 2000 ஆம் ஆண்டில் விடுதிகளைத் திருத்துவதற்கென ஆரம்பிக்கப்பட்ட ரூபா 3,043,238 கிரயத்திலான வேலை 2012 டிசெம்பர் 31 வரையும் முடிவுறாதிருந்தன. பின்னர், இவ்வேலை கைவிடப்பட்டிருந்தது.

**3.8 மனிதவள முகாமைத்துவம்**

(அ) முறையான மனிதவள முகாமைத்துவத் திட்டம் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(i) அதிகாரசபையின் ஊழியர்களது எண்ணிக்கை 8,000 க்கு மேற்பட்டபோதும், மனிதவள முகாமைத்துவ நடவடிக்கைகளுக்கென வேறாக ஒரு பிரிவை அதிகாரசபை நிறுவவில்லை. மனிதவள முகாமைத்துவ நடவடிக்கைகள் நிர்வாக மற்றும் நிதிப் பிரிவின் பணிப்பாளரது மேற்பார்வையின் கீழ் இயங்கியவாறிருந்தது.

(ii) தேவைகளுக்கான பகுப்பாய்வை மேற்கொள்வதன் மூலம் மனிதவளப் பயன்பாட்டின் ஆக்கபூர்வத்தன்மைக்குரிய தேவைகளைத் தீர்மானிக்க இயலும். இதற்கமைய, விரிவான தேவைகளுக்கான பகுப்பாய்வை மேற்கொண்டு மனிதவள முகாமைத்துவத் திட்டம் ஒன்றை அதிகார சபை மேற்கொள்ளவில்லை.

(iii) 2003 ஜுன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 9.3.1 ஆம் பிரிவின் பிரகாரம், ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் பதவி உயர்வுகளுக்கு பொதுத் திறைசேரியின் பொது முயற்சிகள் திணைக்களத்தின் இசைவுடன் ஆளுநர் சபையினதும் நேரடி அமைச்சினதும் அங்கீகாரத்தை அதிகாரசபை பெற்றிருக்கவில்லை.

(ஆ) பதில் கடமை ஆற்றுவதற்கான படிகளின் மேலதிக கொடுப்பனவு

2008 ஜனவரி முதல் 2013 பெப்ரவரி வரை அரச தனியார் பங்குபற்றல் செயற்திட்டத்தின் செயற்திட்டப் பணிப்பாளராகப் பதில் கடமை ஆற்றியதற்காக அதிகாரசபையின் பணிப்பாளர் ஒருவருக்கு ரூபா 648,365 பதில் கடமையாற்றுவதற்கான படியாக வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், ஓராண்டிற்கான நியமனமே பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்டம் தற்போது செயற்பாட்டில் இல்லை.

**4. கணக்களி தகைமையும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

அதிகார சபையானது மூலதனச் செலவினத்திற்கான விரிவான பாதீட்டுத் திட்டம் ஒன்றைச் சமர்ப்பிக்காது போனமை அவதானிக்கப்பட்டது. ஆகவே, மூலதன விடயங்களிலான பெருமளவு வித்தியாசங்களை புலனாய்வு செய்ய முடியாது

போயிற்று 2012 ஆம் ஆண்டிற்கான திருத்தப்பட்ட செய்யப்பட்ட பாதீடு 2012 நவெம்பர் 12 ஆந் திகதியன்று பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆகவே, பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்படவில்லை.

### 4.2 நிதிசார் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான வரைவு நிதிக்கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 18 ஆந் திகதியன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டன. நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிப்பதில் நிலவிய குறைபாடுகளை அதிகாரசபையின் முகாமைத்துவத்துக்குத் தெரியப்படுத்தியதையடுத்து 2014 மே 22 ஆந் திகதியன்று வரைவு நிதிக்கூற்றுக்கள் மீளப் பெறப்பட்டு 2014 ஜுன் 25 ஆந் திகதியன்று திருத்தப்பட்ட நிதிக்கூற்றுக்கள் மீளச் சமர்ப்பிக்கப்பட்டன.

## 5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் தொடர்பான குறைபாடுகள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதியதிகாரச் சட்டத்தின் 13(7) பிரிவின் பிரகாரம் வழங்கப்பட்ட எனது விரிவான அறிக்கையின் மூலம் அதிகாரசபையினது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்களில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) வீதிப் பராமரிப்பும் சேவை நாடுநர் வேலைகளும்
(ஆ) நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்
(இ) தொடர்புடைய தரப்பினர்களுடனான கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்தல்
(ஈ) பிராந்திய அலுவலகங்களை முகாமைத்துவம்
(உ) மோட்டார் வாகனப் பாவனை
(ஊ) காணிகளது பயன்பாடு
(எ) ஒப்பந்த நிர்வாகம்
(ஏ) பொருளிருப்புக் கட்டுப்பாடு